## அக்டோபர் - 29

**"நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. துன்பப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை, கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்."**

**- 2கொரி 4 : 8 - 10.**

இப்பொழுதிருக்கிற இந்த ஜீவியத்தில் யார் கர்த்தரின் நிமித்தமாக சத்தியத்தின் நிமித்தமாக மிகப்பெரிய அவமானத்தையும், மிகப்பெரிய நிந்தையையும், மிகப்பெரிய சோதனைகளையும், மிகப்பெரிய துன்பங்களையும், சந்தோஷமாக சகித்து இவ்விதமாக போதகரும் மாதிரியுமான அவருக்கு இருந்தவைகளில் மிகவும் அதிகமான அளவில் ஒத்த அனுபவங்களை அடைந்திருக்கிறார்களோ, அவர்கள் இப்படிப்பட்ட தியாகங்களில் காட்டியிருக்கிற தங்களுடைய உண்மைக்குச் சமமாக வருங்காலத்தில், ",மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது" என்று அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறப் பிரகாரமாகச் சிறந்த பலனைப் பெற்றிருப்பார்கள் என்று நாம் நிச்சயமுள்ளவர்களாயிருக்கலாம்.

- Z ’01, 55 (R 2760)

புறம்பான விவகாரங்களில், நம்முடைய வாழ்கை முற்றிலுமாக அமைதியாக இருக்க அனுமதிக்கக் கர்த்தர் மிகவும் பிரியப்படுகிறதில்லை. அப்படிப்பட்ட போக்கு இப்பொழுதும் இனிவருங்காலத்திலும் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்வதற்காக நம்மை தகுதியற்றவர்களாக்கும். அதற்கு மாறாக, எல்லாவிதமான அனுகூலமற்ற அனுபவங்கள் நம்முடையவைகளாக இருக்கக் கர்த்தர் அவைகளை அனுமதிக்க பிரியமுள்ளவராயிருக்கிறார். இவைகளின் சிலவற்றின் ஊடே நம்முடைய சக்தி அநேகமாக முறிந்து போகிறது. ஆனால் நம்முடைய முதுகுக்கு நமது சுமையையும், சுமைக்கு நம்முடைய முதுகையையும் பொருத்தி ஒவ்வொரு ஏற்ற சமயத்திற்காகவும் போதுமான கிருபையையும் கொடுத்து இவ்விதமாக படிப்படியாக, நம்முடைய கர்த்தரின் விஷயத்தில் நடந்தது போல, அன்புள்ள தியாகத்தில் நம்முடைய கர்த்தருடனே கூட ஒவ்வொருநாளும், நம்முடைய மானிட ஜீவனைக் கொடுக்கிற தம்முடைய சீஷர்களாக நம்மை குணத்தின் பூரணத்துக்குக் கொண்டுவருகிறார்.

- P ’36, 111.

**ஒத்து வாக்கியங்கள் :-**

அப் 9:16; ரோம 8:17,18,23; 1கொரி 4:12,13; 2கொரி 1:5-7; 4:11-18; 6:4,5; 11:23-28; பிலி 1:29; 2:27-29; 2தெச 1:4,5; யாக் 5:10; 1பேது 5:10.

**கோபுர வாசிப்பு** : Z ’15, 120 (R 5670)

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நான் அடைந்த துன்பம் என்ன? எப்படி? ஏன்? பலன் என்ன?